**අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**
**OFFICE ON MISSING PERSONS**

**ஊடக வெளியீடு** **29 ஆகஸ்ட 2019**

## பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை நினைவுகூறல்

2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (OMP) பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை நினைவுகூர்கின்றது. 2011 ஆம் ஆண்டின் பிரகடனத்தை தொடர்ந்து பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் இந்த நாளில் நினைவுகூரப்படுகிறார்கள். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (OMP) இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை முதன்முதலில் அரச தலைமையிலான நிகழ்வாக நடாத்தியது .

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய (ஸ்தாபித்தல் , நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமானது காணாமல் போனவர்களையும் காணாமலாக்கப்பட்டுள்ள நபர்களையும் தேடி கண்டுபிடிக்கவும் மற்றும் அவர்கள் காணாமல் போன சூழ்நிலையை கண்டறியவும் ஒரு வெளிப்படையான ஆணையைக் கொண்ட முதலாவது நிரந்தர மற்றும் சுயாதீன அரச நிறுவனமாகும். காணாமல் போனவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டுள்ள நபர்களின் உறவினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொது ஆதரவை உருவாக்குவதற்கும், உறுதிப்பாடுகளையும் நினைவுபடுத்தலையும் மேற்கொள்ளல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்கும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு அதிகாரம் உள்ளது.

இந்த வருடம், காணாமல் போனவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டுள்ள நபர்களின் தினம், பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் இல.32, சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ வீதி, கொழும்பு 7 இலுள்ள ‘ஸ்ராவஸ்தி மந்திரய’ எனப்படும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் பங்களிப்புடன் அனுஷ்டிக்கப்படும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்து காணாமல் போவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

அதன் தகவல் தொடர்பான பிரச்சாரத்தை ‘‘வலி ஒருபோதும் மறையாது, உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான எங்கள் பொறுப்பை நிறைவேற்றுவோம்’’ என்ற தலைப்பில் நடாத்தும்.